**செ. கு. எண்: 002** **நாள்: 07.01.2019**

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K. பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 7.1.2019

**ஈரோடு மாவட்டம்,** அந்தியூர் வட்டம், வரட்டுப்பள்ளம் நீர்த்தேக்கத்திலிருந்து பழைய ஆயக்கட்டு ஏரிகளான கெட்டிசமுத்திரம், அந்தியூர், பிரம்மதேசம், வேம்பத்தி மற்றும் ஆப்பக்கூடல் ஆகிய ஏரிகளுக்கு தண்ணீர் திறந்துவிடுமாறு வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, ஈரோடு மாவட்டம், அந்தியூர் வட்டம், வரட்டுப்பள்ளம் நீர்த்தேக்கத்திலிருந்து பழைய ஆயக்கட்டு ஏரிகளான கெட்டிசமுத்திரம், அந்தியூர், பிரம்மதேசம், வேம்பத்தி மற்றும் ஆப்பக்கூடல் ஆகிய ஏரிகளுக்கு **10.1.2019 முதல் 21.1.2019 வரை** தண்ணீர் திறந்துவிட நான் ஆணையிட்டுள்ளேன்.

இதனால் ஈரோடு மாவட்டம், அந்தியூர் மற்றும் பவானி வட்டங்களிலுள்ள **1039 ஏக்கர்** நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், விவசாயப் பெருமக்கள் நீரை சிக்கனமாக பயன்படுத்தி, நீர் மேலாண்மை மேற்கொண்டு உயர் மகசூல் பெற வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**